பக்கங்கள்:-22

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | கார்த்திகை 05 | சனிக்கிழமை | 22.11.2025 | அதிர்வு 114

## அசிட் வீச்சில் தாய் மரணம் மகள் காயம்

### இரத்தினபுரியில் கொடூரம்

அசிட் வீச்சுத் தாக்குதலில் 06



# கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே அநுர அரசைக் கவிழ்த்தே தீருவோம்!

## நுகேகொடைப் பேரணியில் நாமல் சூளுரை

“துறைமுகத்தில் நங்கூரமிட்டு வைப்பதற்காகக் கப்பல் நிர்மாணிக்கப்படுவதில்லை. அது ஆழ்கடலில் பயணித்தாக வேண்டும். புயல் வரும், சவால்களும் வரும். கௌரவ ஜனாதிபதி அவர்களே, கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே உங்கள் அரசு கவிழ்க்கப்படும் என்பதை உங்களுக்கு நினைவுபடுத்துகின்றோம். அதற்காகவே மக்கள் சக்தி கட்டியெழுப்பப்படுகின்றது.”

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார். 02



# என்.பி.பி. ஆட்சியை விரட்ட சஜித்துக்கு ஹரின் அழைப்பு

தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எதிரான கூட்டு எதிரணியின் அடுத்த பேரணியில் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் பங்கேற்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அநுர அரசுக்கு எதிராக நுகேகொடையில் நேற்று நடைபெற்ற பேரணியில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“76 வருட காலம் நாட்டை நாம் நாசமாக்கவில்லை. 1965 இல்ஜே.வி.பி. உதயமான பின்னரே நாடு வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. 06






ஓர் ஊடகவியலாளனாகக் கடந்த 45 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பான சமரச முயற்சிகளை சற்று நெருக்கமாக இருந்து அவதானித்து வரும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது.

அவற்றினிடையே ஒரு வினோதமான போக்கை நான் கண்டு வந்திருக்கிறேன்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமரசப் பேச்சுக்கள், முயற்சிகள் எப்போதும் ஆரம்பிக்கப்பட்டதும் இனவாதத்தை தூண்டும் சம்பவங்கள் உடனடியாக மோசமாக வெடிக்கும்.

பண்டா – செல்வா ஒப்பந்த காலத்தில் இருந்து இதுதான் இலங்கையின் எழுதப்படாத நியதியாக தொடர்கின்றது. நீடிக்கின்றது.

வவுனியா எல்லைப் புறத்தில் தமிழ்க் கிராமங்களின் மீது இராணுவத்தினர் நடத்திய மிக மோசமான கொடூரத் தாக்குதல்களைக் காரணம் காட்டித்தான் 40 ஆண்டுகளுக்கு முன்னர் திம்புப் பேச்சு முறிவடைந்ததாக – முடிவடைந்ததாக – எனக்கு நினைவு உண்டு. 06

# கிடைக்கும் முதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அநுர அரசுக்கு எதிராக நுகேகொடையில் நேற்று நடைபெற்ற பேரணியில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“இந்த அரசு ஏற்றுக்கொள்ள முடியாத பல பொய்களைக் கூறி ஆட்சிக்கு வந்தது.

இவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் ஐ.எம்.எவ். உடன்படிக்கையில் இருந்து வெளியேறுவோம் என்றனர். ஆனால், ஆட்சிக்கு வந்தவுடன் ஐ.எம்.எவ்வுடன் இணைந்து கொண்டனர்.

தேர்தலில் வெற்றி பெற பல பொய்யான வாக்குறுதிகளை வழங்கி சாதாரண மக்களது வாக்குகளை வேட்டையாடிய இந்த அரசு, ஆட்சிக்கு வந்த பின்னர் அந்த வாக்குறுதிகளை புறந்தள்ளிவிட்டு ஏற்றுக் கொள்ள முடியாத வாழ்க்கைச் சுமை அதிகரிப்பைக் கொடுத்துள்ளது.

மறுபக்கம் அரச ஊழியர்களை இல்லா தொழிக்கும் செயற்பாட்டில் இந்த அரசு ஈடுபட்டு வருகின்றது.

அரச ஊழியரகளைப் பழிவாங்கும் செயற்பாடுகளைத் தீவிரமாக இந்த அரசு முன்னெடுத்து வருகின்றது.

தங்களுடைய அரசியல் தேவைக்காக அரச ஊழியர்களைப் பயன்படுத்திக் கொண்ட இந்த அரசு தற்போது அவர்களைக் கைவிட்டுள்ளது.

கௌரவ ஜனாதிபதி அவர்களே, கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே உங்கள் அரசு கவிழ்க்கப்படும் என்பதை உங்களுக்கு நினைவுபடுத்துகின்றோம்.” – என்றார்.

























# மாவீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டு நேற்று நல்லூரில் திறந்துவைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

மாவீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் யாழ்ப்பாணம் நல்லூரில் திறந்து வைக்கப்பட்டது.

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிரைத் தியாகம் செய்த போராளிகளை நினைவுகூரும் மாவீரர் வாரம் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

இதனையொட்டி யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்திற்கு முன்பாக அமைக்கப்பட்ட மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு நேற்று மாலை 6 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

இதன்பொழுது பொதுச்சுடர்சி மாவீரர்களின் உறவினர் ஒருவர் ஏற்றிவைத்து மலரஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து பலரும் மலரஞ்சலி செலுத்தினர்.

மாவீரர்களின் பெற்றோர், முன்னாள் போராளிகள், அரசியல் பிரதிநிதிகள் , உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



















## பொய்களைக் கூறியமைக்காக

# மஹிந்தவிடம் அநுரகுமார மன்னிப்பு கேட்க வேண்டும்

### இப்படி நுகேகொடை பேரணியில் கம்மன்பில வலியுறுத்து

"முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை வணங்கி 14 மாதங்களாக நீங்கள் கூறிய இந்தப் பொய்களுக்கு மன்னிப்புக் கேட்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கேட்டுக் கொள்கின்றோம்."

– இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி உட்பட அனைத்து எதிர்க்கட்சிகளையும் விரைவில் ஒரே மேடையில் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

நுகேகொடையில் நேற்று நடைபெற்ற அநுர அரசுக்கு எதிரான பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"தங்காலையில் இடம்பெற்ற கூட்டத்தின் போது, நுகேகொடை பேரணி, போதைப்பொருள் வியாபாரிகளைப் பாதுகாக்கவே நடத்தப்படுவதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கூறினார். இது என்ன முட்டாள்தனம்?

நுகேகொடை பேரணியில் யாராவது போதைப்பொருள்களுக்கு ஆதரவாகப் பேசினார்களா? இந்த அரசு பயந்துவிட்டது. ஒவ்வொரு கூட்டத்திலும் எதிர்க்கட்சிகளைப் போதைப்பொருள் ஆதரவாளர்கள் என்று அரசு குற்றம் சாட்டுகின்றது.

இப்போது மக்கள் இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கவனம் செலுத்துவதில்லை. ஜனாதிபதி கூறிய பொய்களை மக்கள் நன்கு அறிவார்கள். அதனால்தான் மக்கள் இப்போது இந்த அரசுக்கு எதிராகச் செயற்படுகின்றார்கள்.

ஜனாதிபதி கூறிய பொய்கள் நிறையவே உள்ளன. அவர் 14 மாதங்களாக பொய்களை மட்டுமே கூறி வருகின்றார். நான் அவருக்கு இன்னும் 14 மாத அவகாசம் தருகின்றேன். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை வணங்கி 14 மாதங்களாக நீங்கள் கூறிய இந்தப் பொய்களுக்கு மன்னிப்புக் கேட்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

ஜனாதிபதி கூறிய இந்தப் பொய்களுக்கு நாட்டு மக்களிடமும் அவர் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்." – என்றார்.

# ஒற்றையாட்சி அரசமைப்பையே கோருகின்றதாம் தமிழரசுக் கட்சி

### கஜேந்திரகுமார் எம்.பி. சொல்கின்றார்

தமிழ் மக்கள் நிராகரித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியே கைவிட்டதாகக் கூறிய ஒற்றையாட்சி அரசமைப்பையே தற்போது அந்தக் கட்சி வலியுறுத்தி வருகின்றது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர்

இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் இடையே நடைபெற்ற பேச்சு தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தச் செயற்பாடானது தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் துரோகச் செயலாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த தேர்தலில் தோற்றவர்கள் இப்போது பின்வாசலால் பிரவேசித்து தமிழரசுக் கட்சியில் அரசியல் செய்கின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் எம்.பிக்களும் தமிழ் மக்களை ஏமாற்றியுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதியுடன் அண்மையில் நடந்த சந்திப்பில் தமிழரசுக் கட்சியினர் ஒற்றையாட்சியையே வலியுறுத்தினர் என்றும் கஜேந்திரகுமார் எம்.பி. மேலும் தெரிவித்துள்ளார்.



# வட, கிழக்கு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஜனாதிபதி இனிமேலும் புறக்கணித்திருக்க முடியாது

## நுகேகொட கூட்டத்தில் கீதநாத் காசிலிங்கம் காட்டம்

வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு கடந்த ஆண்டு தேர்தல் பிரசாரத்தின் போது வழங்கப்பட்ட முக்கிய வாக்குறுதிகளை ஜே.வி.பி. அரசு நிறைவேற்றத் தவறிவிட்டதாக ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கீதநாத் காசிலிங்கம் விமர்சனம் வெளியிட்டுள்ளார்.

பிரதான எதிர்க் கட்சிகளின் ஏற்பாட்டில் நுகேகொடையில் நேற்று நடைபெற்ற அரசாங்கத்துக்கு எதிரான கூட்டத்தில் உரையாற்றிய அவர், ஜே.வி.பி. அரசாங்கம் தமிழ் பேசும் சமூகங்களுக்கு அளித்த எந்த ஓர் உறுதியையும் இது வரை நிறைவேற்றவில்லை, வடக்கு கிழக்கில் வலுவான மக்கள் ஆணை பெற்றிருந்தபோதும் தாம் வழங்கிய



வாக்குறுதிகள் கைவிட்டுள்ளனர் எனக் குற்றம் சுமத்தினார்.

தேர்தல்கள் நிறைவுற்று ஒரு வருடம் ஆகிவிட்ட போதும் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இன்று வரை மதிக்கப்படவில்லை எனக் குறிப்பிட்ட அவர் இன்னும் எவ்வளவு காலம் இந்த சமூகங்களை அரசாங்கம் ஏமாற்றப் போகிறது என்றும் கேள்வி எழுப்பினார்.

குறிப்பாக, தேர்தலுக்கு முன்பு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, 13ஆம் திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துதல், அரசியற் கைதிகளை விடுவித்தல் மற்றும் பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தில் மாற்றங்கள் செய்வது ஆகிய உறுதிகளை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க வழங்கியிருந்தார்.

இந்த விவகாரங்கள் தொடர்பான எமது கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை – ஆனால் மக்கள் அளித்த ஆணையை அரசு மதிக்க வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கிற்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை இனிமேலும் புறக்கணிக்க முடியாது – என்றும் அவர் தெரிவித்தார்.






# கடற்றொழிலாளர்கள் தொழிற்றுறை சார்ந்த வல்லுநர்களாகவும் பரிணாமம் பெற வேண்டும்

## யாழ் சமுத்திரவியல் பல்கலையின் உதவிப் பணிப்பாளர் வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

கடற்றொழிலாளர்கள் தொடர்ந்தும் மீன்பிடியாளர்களாகவே இருக்காது தொழில் துறைசார் வல்லுநர்களாகவும் பரிணாமம்பெற வேண்டும் என வலியுறுத்திய யாழ் சமுத்திரவியல் பல்கலைக் கழகத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி சயந்தன் லிந்தா அதற்கான அனைத்து துறைசார் கல்வியூட்டல்களையும் வழங்க சமுத்திரவியல் பல்கலைக்கழகத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

உலக கடற்தொழிலாளர் தினத்தை முன்னிட்டு மெசிடோ நிறுவனத்தின் அனுசரணையில் 'நவீன தொழில் நுட்பத்தின் ஊடாக சமுத்திரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தல்: சிறிய அளவிலான மற்றும் நிலையான மீன்வளத்தை வலுப்படுத்தல்' என்னும் தொனிப்பொருளில் நடமாடும் சேவை முறையிலான பயிற்சிப் பட்டறை ஒன்று யாழ்ப்பாணத்தில் உள்ள சமுத்திரவியல் பல்கலைகழகத்தில் ஒரு நாள் நிகழ்வாக நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஊடகவியலாளர் சந்திப்பை முன்னெடுத்திருந்த அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:–

கடற்றொழில் சமூகத்தை மட்டுமல்ல,



அந்தத் துறைசார் முயற்சிகளை முன்னெடுப்பவர்களையும் அடுத்த கட்டத்தை நோக்கி முன்னகர்த்திச் செல்லும் வகையில் சட்டரீதியான பயிற்சிகள் மட்டுமல்லாது ஏனு தொழில் சான்றிதழ், பட்டப்படிப்புகள் என கடல் சார் பல்லியல் கற்கை நெறிகளை வழங்குவதற்கு சமுத்திரவியல் பல்கலைக்கழகம் ஒரு திறவுகோலாக இருக்கின்றது.

ஆனால் இங்கு கல்வி கற்க மாணவர்கள் வருகை மிகக் குறைவாகவே இருக்கின்றது. இதற்கான காரணத்தை தேடியபோது கடற்றொழில் சமூகத்தில் மட்டுமல்லாது இளைஞர் மட்டத்திலும் இது தொடர்பில் போதிய விழிப்புணர்வு சென்றடையவில்லை என்பது தெரிய வருகின்றது.

இதே நேரம் இங்கு சாதாரண கற்கை நெறிகள் தொடக்கம் படகு இயந்திரங்கள் திருத்தல், ஆழ்கடல் நீச்சல், கடலுணவு தயாரிப்புகள் ஜி.பி.எஸ். கண்காணிப்பு மற்றும் அளவீட்டு முறை என பல வகையான தொழொல்துறை கற்கைகள் பயில்விக்கப்படுகின்றன.

இந்த விடயங்களை மக்கள் மத்தியில் கொண்டுசெல்ல வேண்டும் என்ற உத்வேகத்துடன் இம்முறை உலக கடற்றொளிலாளர் நாளை முன்னிட்டு பல்வேறு பகுதிகளிலும் நடமாடும் பயிற்சி கருத்தரங்குகளை முன்னெடுத்து வருகின்றோம். இந்த வய்ப்பை அனைவரும் சரியாக பயன்படுத்திக் கொள்வதனூடாக தொழில் சந்தையில் தங்களை நிலை நிறுத்திக் கொள்ள முடியும். – என்றும் தெரிவித்தார்.

# மாவீரர் நாளை முன்னிட்டு நேற்று இரத்ததான நிகழ்வு



மாவீரர் நாளை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இரத்ததான நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை இரத்த வங்கி பிரிவினரின் பங் கேற்பில் சுப்பர்மடம் கடற்றொழிலாளர் சங்க பொது மண்டபத்தில் இடம்பெற்ற இரத்ததான நிகழ்வில் 33 பேர் பங் கேற்று குருதிக்கொடை வழங்கியுள்ள னர்.

இதன்போது பருத்தித்துறை நகரசபை தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல் பங்கேற்று மாவீரர்களுக்கு அஞ் சலி செலுத்தியிருந்தார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜே.ஆர்.ஜெயவர்தன அரசுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் பேச்சு நடந்த காலங்களில் ஆங்காங்கே இனக் கலவ ரங்கள் தாராளமாக வெடித்து அந்தப் பேச்சுக்கு முட்டுக்கட்டைகள் போட்டன.

இலங்கை – இந்திய ஒப்பந்தக் காலத் தில் தென்னிலங்கையில் எதிர்ப்புணர்வு பற்றி எரிந்தமை நமக்குத் தெரிந்ததுதான்.

பிரேமதாஸா அரசுடனும், சந்திரிகா அரசுடனும், ரணில் அரசுடனும், பின்னர் மஹிந்த அரசுடனும் விடுதலைப் புலிகள் சமாதான பேச்சு நடத்திய காலங்களில் எல்லாம் சமரச முயற்சிகளுக்கு சமாந்தி ரமாக வன்முறைகள் வெடித்தமையை நாம் மறக்க முடியாது.

ரணில் அரசுடன் 2002 - 2003 ஆம் ஆண்டுகளில் விடுதலைப் புலிகள் வெளிநாடுகளில் ஆறு சுற்றுப் பேச்சுக்க ளில் பங்கு பற்றிய சமயங்களில் எல்லாம், ஒவ்வொரு சுற்றுப் பேச்சுக்குத் தயாராகும் சமயத்திலும் எங்கோ ஒரு மூலையில் அப்போதைய யுத்த நிறுத்தத்தை மீறி மோதல்கள் வெடிப்பது பொதுவான போக் காக இருக்கும். புலிகளின் சார்பில் பேச்சு வார்த்தைக்குத் தலைமை தாங்கிய மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் பேச்சுக்கு புறப்பட முன்னர் இந்தச் சமயம் எங்கு மோதல் அல்லது மோசமான சம் பவம் எப்படி வெடிக்குமோ என்று அங்க லாய்க்கும் நிலைமை இருந்ததை நான் அறிவேன்.

மஹிந்த ராஜபக்ஷ அரசுடன் ஜெனீவா வில் இரண்டு சுற்றுப் பேச்சுக்கள் நடந்த சமயம், பேச்சுக்கு முன்னரும் பேச்சுக ளுக்கு இடையிலும், பேச்சைத் தொடர்ந் தும் மோதல்கள் வெடித்தமை எல்லோ ருக்கும் தெரியும்.

யுத்தத்தின் பின்னர் மஹிந்த அர சோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு நடத்திய காலங்களில் விடயம் வேறு திசைக்கு திரும்பியிருந்தது. அச்ச மயத்தில் தமிழர்கள் ஆயுதப் போராட்ட ரீதியில் அடக்கப்பட்டு இருந்தமையால், வன்முறைகள் வேறு பக்கம் திரும் பின. அதுவே நல்லாட்சிக் காலத்திலும் நடந்தது.

நல்லாட்சிக் காலத்தில் புதிய அரச மைப்பு உருவாக்கம் அதற்கான நகல் வடிவம் வரை முன்னேறினாலும் 2018 இல் மஹிந்த ராஜபக்ஷவின் 52 நாள்கள் முறையற்ற அரசுடன் அது கிடப்பில் போடப் பட்டது. ஆயினும் அதன் பின்னர் வந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களின் பின் னணியில் எல்லாம் சிதறிப் போயின. ஈஸ் டர் குண்டு தாக்குதலின் சூத்திரதாரிகள் அம்பலமாகும் போதுதான் அதற்கும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமரச முயற்சிகளைக் குழப்பும் போக்குக்கும் உள்ள தொடர்புகள் பற்றியும் அறியக்கூடி யதாக இருக்கும்.

இப்போது புதிய தரப்புக்கள் நேரடி சம ரசப் பேச்சுக்களில் பங்குபற்றும் சூழ்நிலை உருவாகி இருக்கின்றது. தமிழர் தரப்பி லும் பெரும்பாலும் புதிய பிரதிநிதிகள். ஆட்சி தரப்பிலும் ஜே.வி.பியினர் என்ற புதிய பிரதிநிதிகள்.

இந்தப் பேச்சுக்கான பிள்ளையார் சுழி போடப்படும் சமயத்தில் திருகோண மலையில் புத்தர் சிலை விவகாரம் என்ற வெடிப்பு. அத்துடன் விடயம் அடங்குவ தாக இல்லை.

கோட்டாபயவின் ஆட்சிக்காலத்தை விட மோசமான கட்டத்தில் கொடுக்கைத் தூக்கிக் கட்டிக்கொண்டு உஷாராக நிற்கின் றது தொல்பொருள் திணைக்களம்.

கடந்த ஒருசில நாள்களில் தந்தாமலை, வெல்லாவெளி எனத் தமிழர் பிரதேசம் எங்கும் தொல்பொருள் திணைக்களம் எடுத்திருக்கும் அடாவடி அட்டூழியம் தமி ழர் தரப்புக்கும் அரசுக்கும் இடையிலான சமரசப் பேச்சுக்களை முளையிலேயே கிள்ளும் எத்தனமாகத் தோன்றுகின் றது.

இனிமேல் இனப் பிரச்சினைக்கு சமரச – சமாதான – நல்லிணக்கப் பேச்சுக் களை ஆரம்பிப்பதானால், இவ்வாறு இனங்களுக்கு இடையில் குழப்பம் பண் ணும் தரப்புகளை தேடி அடக்கி வைத்து விட்டுத் தான் அவற்றை ஆரம்பிக்க வேண் டும். இல்லையேல் ஒவ்வொரு தடவை யும் நடப்பது போல சமரச முயற்சிகளை இனவாதிகள் ஏதோ ஒரு வகையில் தூண்டி நாசமாக்குவார்கள் என்றே தோன் றுகின்றது.

## அசிட் வீச்சில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள் ளார். இந்தத் தாக்குதலில் அவரது மகள் படுகாயமடைந்துள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் இரத்தினபுரி மாவட்டம், அயகம பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் கொழும்பு – கவர கிரிய பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய தாயும், அவரது 16 வயது மகளும் அசிட் வீச்சில் பலத்த காயமடைந்துள்ளனர் என்று அயகம பொலிஸாருக்கு நேற்று முன்தினம் இரவு தகவல் கிடைத்தது.

அதற்கமைய, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், அந்தத் தாயையும், மகளையும் அயகம வைத்தியசாலையில் அனுமதித்தனர். இதன்போது தாய் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அயல் வீட்டாருடன் ஏற்பட்ட தனிப் பட்ட தகராறினால் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் இரத்தினபுரி வைத்தியசாலை யில் நேற்று வைக்கப்பட்டிருந்தது.

சந்தேகநபர்களைக் கைது செய்ய அயகம பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

## என்.பி.பி. ஆட்சியை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எல்லாத் திட்டங்களையும் அவர்கள் குழப் பினார்கள். எனவே, 76 வருட கால சாபம் நாம் அல்லர். ஜே.வி.பியினர் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி அரசை விரட்டியடிப் பதற்கான நடவடிக்கையின் ஆரம்பப் புள்ளியே இன்று வைக்கப்பட்டுள்ளது.

எனவே, அடுத்த பேரணியில் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் பங்கேற்க வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷ போரை முடித்த தலைவர். ரணில் விக்கிரமசிங்க பொரு ளாதார நெருக்கடியைச் சமாளித்த தலை வர்.

ஒரு சிறைச்சாலை அல்ல 10 சிறைச் சாலைகளில் அடைத்தாலும் எமது பய ணம் தொடரும்." – என்றார்.

# வடக்கு, கிழக்கில் கன மழை மூன்று நாள்களுக்கு நீடிக்கும்



தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கிடைத்து வரும் கன மழை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை நீடிக்கும் என யாழ். பல்கலைக்கழக புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் இந்தோனேசியாவின் பண்டா ஆச்சே மாகாணத்திற்கு அருகாக இன்று புதிய காற்றழுத்த தாழ்வு நிலை ஒன்று உருவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் காற்றழுத்த தாழ்வு நிலை ஒரு புயலாக வலுப்பெற்று மத்திய வங்காள விரிகுடாவின் ஊடாக நகர்ந்து எதிர்வரும் 01.12.2025 அன்று இந்தியாவின் ஆந்திர மாநிலத்திலுள்ள பிரம்மபூர் பகுதிக்கு அண்மையாக கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆரம்பத்தில் இது இலங்கையின் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களுக்கு அருகாக நகரும் என எதிர்பார்க்கப்பட்டாலும்தற்போது இதுகிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களுக்கு தொலைவாகவே நகரும் வாய்ப்புள்ளது.

எனவே, இந்தப் புயலினால் இலங்கையினுடைய எந்தப் பகுதிக்கும் குறிப்பாக வடக்குமற்றும்கிழக்கு மாகாணங்களுக்கு எந்தவிதமான நேரடியான பாதிப்பும் கிடையாது.

இந்தப் புயலினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் எதிர்வரும் 25.11.2025 முதல் 28.11.2025 வரை மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

அதேவேளை எதிர்வரும் 26.11.2025 மற்றும் 27.11.2025 காலப்பகுதிகளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கரையோரப் பகுதிகளில் காற்றின் வேகம் சற்று அதிகமாகக் காணப்படும்.

ஆனால் எதிர்வரும் 25.11.2025 முதல் 28.11.2025 வரை இலங்கையின் கிழக்கு, தென்கிழக்கு மற்றும் வடபகுதிக் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

வங்காள விரிகுடா எங்களுக்கு மழையைத் தீர்மானிக்கும் மிக முக்கிய காரணியாக விளங்குகின்றது.

இங்கு ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் தோன்றுகின்ற தாழமுக்கங்கள், புயல்கள், வளிமண்டல மேலடுக்கு சுழற்சி, வளிமண்டல கீழடுக்கு சுழற்சி போன்றன இதில் முக்கிய பங்கை வகிக்கின்றன.

இவ்வருடம் இதுவரை மூன்று தாழமுக்கங்களும், ஒரு புயலும், இரண்டு வளிமண்டல மேலடுக்கு சுழற்சிகளும் உருவாகியுள்ளன. தற்போது கூட இலங்கையின் தெற்குப் பகுதியில் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகின்றது. இதுவே எமக்கு தற்போது மழை கிடைக்கக் காரணம்.

இவ்வாறு வங்காள விரிகுடாவில் தோன்றும் வளிமண்டல குழப்பங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் செல்வாக்குச் செலுத்தும்போதுதான் எமக்கு மழை கிடைக்கும். அவ்வாறில்லாமல் அவை எங்கள் பகுதி மீது செல்வாக்குச் செலுத்தாமல் கடற்பகுதியூடாக நகரும்போது எமக்குப் போதிய மழை கிடைக்காது. இவ்வருடம் இதுவே எமக்குப் பிராந்திய அளவிலான மழை வீழ்ச்சி வேறுபாட்டுக்குக் காரணம்.

மோந்தா புயலின் போதும் எதிர்பார்த்த மழை கிடைக்கவில்லை. அத்தோடு அது கரையைக் கடந்த பின்னும் சில நாட்கள் வெப்பமான காலநிலை நிலவியது.

இதே நிலையே உருவாகவுள்ள சென்யார் புயலின் போதும் நிகழும். இந்தப் புயலின் போதும் எதிர்பார்க்கும் அளவுக்கு மழை கிடைக்காது (வடக்கு மற்றும் கிழக்கின் பெரிய குளங்கள் வான் பாயும் அளவுக்கு)

ஆனால் அதன் பின்னும் சில நாள்களுக்கு மழையற்ற அல்லது குறைந்த மழையுள்ள காலநிலையே நிகழும்.

இந்தச் சூழ்நிலையில் காலநிலைத் தோற்றப்பாடுகளின் அடிப்படையில் எமது பிரதேசத்தில் (வடக்கு மாகாணத்தில் அல்லது கிழக்கு மாகாணத்தில்) ஒரு தாழமுக்கம் அல்லது ஒரு ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் கரையைக் கடக்க வேண்டும். அவ்வாறு நிகழ்ந்தால் மாத்திரமே எமக்கு நாம் எதிர்பார்க்கும் மழை கிடைக்கும். ஆனால் அத்தகைய ஒரு நிகழ்வால் ஏற்படும் எதிர்மறையான விளைவுகளும் பாரதூரமாக அமையும்." – என்றார்.

# சிகிச்சை பலனின்றி குடும்பஸ்தர் மரணம்

வயிற்று வீக்கம் காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கைதடி மத்தி கைதடியைச் சேர்ந்த சுந்தரம் விக்னேஸ்வரன் (வயது 46) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

கடந்த புதன் கிழமை அதிகாலை தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பின்னர் அன்று இரவு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை சாவகச்சேரி பொலிஸார் நெறிப்படுத்தினர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உள்ளூராட்சி நெருக்கடி

ஜனாதிபதித் தேர்தலிலும், தொடர்ந்து வந்த பொதுத் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தி கணிசமான வெற்றியை ஈட்டியது எனினும் அதன் பின்னர் நடைபெற்ற உள்ளூராட்சி சபை தேர்தலில் அதனால் வலிமையான - உறுதியான - வெற்றியைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. பல உள்ளூராட்சி சபைகளிலும் ஆட்சி அதிகாரத்தை அது கைப்பற்றிய போதிலும், அங்கெல்லாம் அதன் நிர்வாகம் உறுதியான கட்டத்தை எட்டவில்லை.

இந்த ஸ்திரமற்ற நிலையின் பெறுபேறுகளை அந்தக் கட்சி இப்போது எதிர்கொண்டு வருகின்றது.

தேசிய மக்கள் சக்தி வசம் உள்ள பல உள்ளூராட்சி சபைகளில் அதன் தவிசாளர்கள் சமர்ப்பித்து வரும் வரவு - செலவுத் திட்டங்கள் தொடர்ந்து தோல்வி கண்டு வருகின்றன.

குறிப்பாக களுத்துறை, தங்காலை, எட்டியாந்தோட்டை, பதுளை, நாவுல போன்ற பல பிரதேச சபைகளில் அவற்றின் வரவு - செலவுத் திட்டங்கள் தவிசாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டு உறுப்பினர்களால் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

வரவு - செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டாலும் அதனால் சபைகளில் தேசிய மக்கள் சக்தி அதிகாரத்துக்கு உடனடி பாதிப்பு ஏற்படும் நிலைமை இல்லை.

உள்ளூராட்சி சபைச் சட்டங்களின்படி, ஒரு நகர சபை, பிரதேச சபை அல்லது மாநகர சபையில் அதன் தவிசாளரினால் அல்லது நகர சபைத் தலைவரினால் அல்லது மாநகரசபை மேயரினால் சமர்ப்பிக்கப்படும் வரவு - செலவுத் திட்டம் உறுப்பினர்களால் நிராகரிக்கப்பட்டால், அதனை, திருத்தங்களுடன் மீண்டும் இரண்டு வாரங்கள் கழித்து சபைக்குத் தலைவர் சமர்ப்பிக்க வேண்டும். அப்போதும் அது நிறைவேறத் தவறினால், முறையான ஒப்புதல் இல்லாவிட்டாலும், வரவு - செலவுத் திட்டம் தானாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்பட வேண்டும்.

ஆனால், தவிசாளர் அல்லது தலைவருக்கு உள்ள இந்த உரித்து முதல் இரண்டு ஆண்டுகளுக்கு மட்டும் தான். மூன்றாவது ஆண்டின் போதும், இரண்டு தடவைகளும் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் தலைவர் பதவி விலக வேண்டிய நெருக்கடி ஏற்படும்.

ஆக, இந்த ஏற்பாட்டின்படி, 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளிக்கான வரவு - செலவு திட்டங்களை அப்போது பதவியில் இருக்கும் தலைவர்கள் அல்லது தவிசாளர்கள், தத்தமது சபையின் அனுமதியின்றியே நிறைவேற்றப்பட்டன எனக் கருதி விடயங்களை முன்னெடுக்கக் கூடிய வசதி உண்டு.

ஆனால் 2027 இறுதியில் - அதாவது அதற்கடுத்த வருடத்துக்கான - 2028 ஆம் ஆண்டுக்கான - வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் போது இத்தகைய நெருக்கடி ஏற்பட்டால், தலைவர் பதவி விலக வேண்டி வரும்.

ஆகவே பெரும்பான்மை ஆதரவு இல்லாமல் ஆட்சியைத் தக்க வைத்திருக்கும் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் 2027 இறுதிவரை ஒருவாறு சமாளித்து நிர்வாகத்தை கொண்டு நடக்க முடியும். ஆனால் அதற்கு அப்பால் எஞ்சி உள்ள சுமார் ஒன்றரை வருட ஆட்சியைக் கொண்டு நடத்துவது என்பது பல சபைகளிலும் மிக நெருக்கடியானதாக இருக்கப் போகின்றது.

தேசிய மக்கள் சக்தி அதிகாரத்தை கைப்பற்றியுள்ள உள்ளூராட்சி சபைகளில் மாத்திரம் அல்ல, எல்லா உள்ளூராட்சி சபைகளிலும் இந்த நெருக்கடி இருக்கும் என்பதுதான் யதார்த்த நிலைமை.



# திங்கள் முதல் வங்கி அட்டைகள் மூலம் பஸ் கட்டணம் செலுத்தும் வசதி ஆரம்பம்

வங்கி அட்டைகள் மூலம் பஸ் கட்டணம் செலுத்தும் நடைமுறை எதிர்வரும் திங்கள் கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது.

டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் தொழில்நுட்ப ஆலோசனையுடன் நடைமுறைப்படுத்தப்படும் இந்த வேலைத் திட்டம் போக்குவரத்து மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சினூடாக அமுல் படுத்தப்படுகின்றது.

இதன் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் திங்கள் கிழமை மாகும்புர பல்நோக்கு போக்குவரத்து மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

முதல் கட்டத்தின் கீழ் மாகாணங்களுக்கு இடையேயான 03 மார்க்கங்கள் உள்ளிட்ட சுமார் 20 மார்க்கங்களில் வங்கி அட்டைகள் மூலம் பஸ் கட்டணங்களை செலுத்தும் நடைமுறையை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் ஆலோசகர் சுமுது ரத்நாயக்க தெரிவித்தார்.

காலி, மாத்தறை மற்றும் பதுளை வரையிலான பஸ்களில் வங்கி அட்டைகள் மூலம் பஸ் கட்டணங்களை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

05 தனியார் மற்றும் அரச வங்கிகள் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன எனவும் சுமுது ரத்நாயக்க தெரிவித்தார்.

பயணிகளுக்கு மிகுதிப்பணம் வழங்குவதில் காணப்படும் சிக்கலுக்கு தீர்வு வழங்குதல் மற்றும் பஸ் உரிமையாளர்களுக்கு கிடைக்கும் வருமானத்தை சரியாக கணக்கிடுதல் ஆகிய வசதிகள் இதனூடாக கிடைக்கவுள்ளது.

# பல மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை



நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையை அடுத்து, சில மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பதுளை, களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல் மற்றும் நுவரெலிய மாவட்டங்களுக்கே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நேற்று மாலை 4 மணி முதல் அமுல்படுத்தப்பட்டுள்ள முதலாம் கட்ட மண்சரிவு முன்னெச்சரிக்கை, இன்று மாலை 4 மணி வரை அமுலில் இருக்கும் என தேசிய கட்டட ஆராய்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் சில பகுதிகளில், கடும் காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்து வருகிறது.

இதேவேளை, அநுராதபுரம், இராஜங்கணை நீர்த்தேக்கத்தின் நான்கு வான்கதவுகளும் அங்கமுவ நீர்த்தேக்கத்தின் இரண்டு வான்கதவுகளும திறக்கப்பட்டுள்ளன என அவற்றுக்கு பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# இலங்கையின் கடல் வளம் காக்கப்படும்!

## சர்வதேச மீன்வளக் கண்காட்சி நிகழ்வில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

"இலங்கையில் கடல் வளம் மற்றும் நீரியல் வளங்களைப் பாதுகாப்பதற்குரியஅத்தனைநடவடிக்கையும்முன்னெடுக்கப்படும். இதற்காக நவீன தொழில்நுட்பங்களும் பயன்படுத்தப்படும். இந்தத் துறையில் நாம் அடுத்த கட்டத்தை நோக்கிச் செல்ல வேண்டும்."

– இவ்வாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

சர்வதேச மீனவர் தினம் நேற்றாகும். இதனை முன்னிட்டு அக்வா பிளான்ட் இலங்கை – 2025 சர்வதேச மீன்வளக் கண்காட்சி நேற்று கொழும்பு தாமரை கோபுரம் வளாகத்தில் ஆரம்பமானது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப விழாவில் பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். கண்காட்சியையும் ஆரம்பித்து வைத்தார்.

நேற்று முதல் நாளை வரை நடைபெறும் குறித்த சர்வதேச கண்காட்சியில் அலங்கார மீன்களின் அதிசயங்கள், கடல்வாழ் உயிரினங்கள், நவீன தொழில்நுட்பம் மற்றும் பரந்த அளவிலான கடல்சார் பயன்பாடுகள் என்பன காட்சிப்படுத்தப்படும்.

இதற்குக் கட்டணம் எதுவும் அறிவிடப்படமாட்டாது.எனவே,மாணவர்கள்,இளைஞர்கள் உட்பட அனைவரும் பங்கேற்று பயன்பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப நிகழ்வின் பின்னர், உலக மீனவர் தினத்தை முன்னிட்டு தபால் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட நினைவு முத்திரையும் வெளியீட்டு வைக்கப்பட்டதோடு, மீனவர்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது.

அத்துடன், கடற்றொழிலில் இதுவரை குற்றம் இழைக்காத மீனவர்களுக்குப் பாராட்டு சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டது.




மேற்படி இந்த நிகழ்வில் கடற்றொழில் பிரதி அமைச்சர் ரத்ன கமகே, பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர, தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க, டிஜிட்டல் பொருளாதாரப் பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன, கடற்றொழில் அமைச்சின் செயலாளர் டாக்டர் பீ.கே.கோலித்த கமல் ஜினதாச, கடற்றொழில் மற்றும் கடல்வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.ஜே. கஹாவத்தே, அமைச்சின் அதிகாரிகள், தெற்காசிய நாடுகளின் சிரேஷ்ட பிரதிநிதிகள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் இந்தியா, மாலைதீவு, பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கி உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்று ஆரம்பமான இந்தக் கண்காட்சி 3 நாட்களுக்குத் தொடர்ந்து இடம்பெறுகின்றது. இதனைப் பார்வையிட வருமாறு மாணவர்கள் உட்பட அனைவரையும் அழைக்கின்றேன்.

இந்தப் பிராந்தியத்தில் நடக்கும் மிகப் பெரிய கண்காட்சி இதுவாகும் என இதில் பங்கேற்றுள்ள ஒருவர் குறிப்பிட்டார். இதனை எமது நாட்டில் நடத்துவதற்குக் கிடைத்த வாய்ப்பு பெருமையளிக்கின்றது. இதன்மூலம் உலகின் கவனத்தையும் ஈர்க்கலாம்.

எமது அமைச்சின் அதிகாரிகளின் அர்ப்பணிப்பு காரணமாகவே இவ்வளவு பெரிய கண்காட்சியை எம்மால் சிறப்பாக நடந்த முடிந்துள்ளது. அமைச்சின் பிரதி அமைச்சர் மற்றும் செயலாளர், பணிப்பாளர் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் நன்றிகள்.

எமது நாட்டு கடல் மற்றும் நீரியல் வளங்களை பாதுகாப்பதே மாநாட்டின் முதன்மை நோக்கமாகும். இது விடயத்தில் ஜனாதிபதியின், ஏனைய அமைச்சர்களின் அரசின் முழு ஆதரவும் எமக்கு இருக்கின்றது.

அதேவேளை, சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை மூலம் எமது நாட்டு கடல் வளத்தை நாசமாக்கும் நடவடிக்கையில் சிறு மீனவக் குழுவொன்று ஈடுபட்டுள்ளது. இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

நாட்டில் கடற்படையினர் முன்னர் போல் அல்ல. அவர்கள் தற்போது நாட்டைக் கட்டியெழுப்புவதற்குச் சிறந்த பங்களிப்பை வழங்கி வருகின்றனர்." என்றார்.


# சாரதி உரிமங்களுக்கு அபராதப் புள்ளி முறை

ஒழுக்கமாக வாகனம் செலுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் சாரதி உரிமங்களுக்கு அபராதப் புள்ளி முறையை அறிமுகப்படுத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அடுத்த ஆண்டு முதல் சாரதி உரிமங்களுக்குக் குறைபாடுள்ள புள்ளிகள் முறை அறிமுகப்படுத்தப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த புதிய வழிமுறை நாட்டில் வீதிகளில் மீண்டும் மீண்டும் போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகளை அடையாளம் காண உதவியாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் பாதுகாப்பாக வாகனம் செலுத்துவதை ஊக்குவிப்பதே இதன் நோக்கம் என்றும் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.









# வடமராட்சி பிரதேசத்தில் மாவீரர் வார நிகழ்வுகள்

வடமராட்சி பிரதேசத்தில் பல்வேறு இடங்களில் பொதுமக்கள் ஒன்று திரண்டு மாவீரர் வார நிகழ்வுகளை எழுச்சிபூர்வமாக ஆரம்பித்தனர்.

இன்பர்சிட்டி, வியாபாரிமூலை, சுப்பர்மடம், முனை, கோரியடி உள்ளிட்ட பல இடங்களில் பந்தல்கள் அமைத்து, சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு மாவீரர் வார நிகழ்வுகள் தொடங்கப்பட்டன.

அந்தந்த பகுதிகளை சேர்ந்த மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு மாலை அணிவிக்கப்பட்டு, ஈகைச்சுடர்கள் ஏற்றப்பட்டு, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.













# தொல்பொருள் திணைக்களத்தினரை நேற்றுத் துரத்தியடித்த பொதுமக்கள்!

## வெல்லாவெளியில் சம்பவம்

(வ.சக்திவேல்)

தொல்பொருள் திணைக்களத்தினால் மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி பிரதேச சபைக்குட்பட்ட 35 ஆம் கிராமம் கண்ணபுரம்,கிராமத்தில் உள்ள வீதியில் தொல்லியல் இடமாக அங்கிகரித்து பெயர் பலகை நடுவதற்கு நேற்று வெள்ளிக் கிழமை வருகை தந்த தொல்லியல் திணைக்களத்தினரை போரதீவுப்பற்றுப் பிரதேசசபையின் தவிசாளர் உள்ளிட்ட குழுவின் அவ்விடத்திற்கு விரைந்து வருகை தந்த தொல்பொருள் திணைக் களத்தினரை துரத்தியடித்துள்ளனர்.







தொல்பொருள் திணைக்களத்தின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி மக்கள் ஆர்ப்பட்டத்தில் ஈடுபட் டனர். பின்னர் வெல்லாவெளியில் அமைந்துள் பிரதேச செயலகத்திற்குச் சென்ற பிரதே சபைத் தவிசாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட குழுவினர் அற்கு நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் கலைந்து சென்றனர்.

இதன்போது கருத்தத் தெரிவித்த போரதீவுப் பற்றுப் பிரதெ சபையின் தவிசாளர் வி.மதிமேனன் –

போரதீவுப் பற்றுப் பிரதேச சபைக்கு உட்பட்ட வேத்துச்சேனை, கண்ணபுரம், மற்றும் விவேகானந்தபுரம், ஆகிய கிராமங்களுக்கு தொல்லியல் திணைக் களம் என்ற பெயரிலே மூன்று உத்தி யோகத்தர்கள் தொல்லியல் பொருள்கள் இருக்கின்றன எனத் தெரிவித்து, அடையா ளப்படுத்தி, பல பதாகைகளை இடுவதற் காக எமது பிரதேசத்திற்கு வந்திருந்தனர்.

இந்த நிலையில் எமது பிரதேச சபை உறுப்பினர்கள், இப்பிரதேச பொது அமைப்புக்கள், பொதுமக்கள், அயல் பிரதேசமான மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் தவிசாளர் உள்ளிட்ட அனைவரும் ஒன்றிணைந்து இவ்வாறு தொல்லியல் இடம் என அடையாளப்படுத்துவதற்காக வருகை தந்திருந்த அதிகாரிகளை எதிர்த்து இவை தொல்லியல் இடம் இல்லை என்பதைத் தெரிவித்து இருந்தோம்.

தொல்லியல் திணைக்களத்தினால் 24 இடம் இருக்கின்றன எனர் தெரிவித் திருந்தார்கள். தற்போது 34 இடங்க இருக்கின்றன எனக் கூறுகின்றார்கள். அவற்றுக்குரிய பதாகைகளை நடுவதற் காக வந்திருக்கின்றார்கள் எனத் தெரிவித்தார்கள். அந்த வகையில் அதற்கு எமது மக்களுடன் சேர்ந்து நாங் கள் பாரிய எதிர்ப்பினைத் தெரிவித்தோம்.

வடகிழக்கிலே தமிழர்களுக்கு பாரிய அச்சுறுத்தலாக வனப் பாதுகாப்புத் திணைக்களமும், தொல்லியல் திணைக் களமும் காணப்படுகின்றன. அதுபோன்று தான் அண்மையில் திருவோண மலையிலும், புத்தர் சிலை ஒன்று அமைக் கப்பட்டுள்ளது.

வடகிழக்கிலே பௌத்தமயமாக்கல் நடவடிக்கை தேசிய மக்கள் சக்தி என்ற பெயரிலே வந்த அரசாங்கம் – முன்னர் ஜே.வி.பியினுடைய கொள்கையை பின்பற்றி வந்துள்ள அரசாங்கம் – பலாத் காரமாக தமிழர்கள் வாழும் பகுதியிலே தொல்லியல் இடங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்து இனங்களுக் கிடையிலான இன முரண்பாட்டை தோற்று வித்து, எமக்குள்ளே ஓர் குழப்பத்தை ஏற்படுத்த பார்க்கிறார்கள்.

அந்த வகையில் இந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு நாங்கள் கூறிக் கொள்வது யாதெனில் எங்கள் வடகிழக் கிலே இருக்கின்ற தமிழ் மக்களை நீங்கள் குழப்ப முடியாது. எப்போதும் நாங்கள் எமது சமய, புராண, பூர்வீக நிலத்தை நாங்கள்தான் ஆள வேண்டும். நீங்கள் உங்களுடைய பௌத்த மயமாக்கல் என்பதை தொல்பொருள் திணைக்க ளத்தை வைத்து எமது நிலங்களை அபகரிக்க கனவிலும் நினைக்கக் கூடாது என்பதை நாம் தெரிவித்துக் கொள் கின்றோம்.

கடந்த காலத்தில் சில தமிழ் மக்கள் விட்ட தவறினால் மட்டக்களப்பு மாவட்டத் திலும் ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப் பினர் தேசிய மக்கள் சக்தியின் ஊடாக உருவாக்கி இருக்கின்றார். பிரதேச சபைகளுக்கு உறுப்பினர்கள் உருவாகி இருக்கின்றார்கள். எதிர்வரும் காலங்க ளில் தேசிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. போன்ற கட்சிகளுக்கு தமிழ் மக்கள் மீண்டும் வாக்களித்து அவர்களை நாடா ளுமன்றத்துக்கோ மாகாண சபைக்கோ, உள்ளூராட்சி சபைகளுக்கோ இனியாவது அனுப்பாமல் விட்டு, எமது தமிழ் மக்களின் நிலங்களை பாதுகாப்பதற்கு எமது தமிழரசுக் கட்சிதான் என்றும் கடைசி வரைக்கும் நிற்கும் என்பதை நான் கூறிக் கொள்கின்றேன்.

இன்றைய தினம் இந்தச் செயற்பாட் டுக்காக நாம் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டு பிரதேச செயலாளருடன் உரையாடி உள்ளோம். எங்களுடைய தமிழ் மக்களுடைய பூர்வீக காணிகளில் பொது அமைப்புகளின் எதுவித சம்பந்தங் களும் இல்லாமல், எந்தவித கலந்துரையா டலும் இல்லாமல், தாங்கள் நினைத்தபடி பலாத்காரமாக அணுகி, எதையும்சாதித்து விட முடியாது. மக்களின் பலத்தினால் நாம் அவர்களின் அணுக் கலை நாம் இன்று முறியடித்து இருக் கின்றோம்.

எனவே தொல்லியல் திணைக்களத் தினர் முதலில் பொதுமக்களுடன் கலந்து ரையாட வேண்டும். பிரதேச சபையினு டைய வீதியிலே பதாகைகளை வைக்கும் போதும், வேலை திட்டங்களை மேற்கொள் ளும் போதும் பிரதேச சபையின் அனு மதியைப் பெற வேண்டும். எமது பிர தேசத்தில் அவர்கள் அடையாளப்படுத்தி இருக்கும் 34 பிரதேச இடங்களுக்கும் சென்று அங்கிருக்கின்ற பொது அமைப் புகளுடன் கலந்துரையாட வேண்டும். அதன் பின்னர் தான் தொல்லியல் இடம் என்ன அடையாளப்படுத்தி பதாகைகளை இடவேண்டும். இது போன்ற தகவல்களை நாம் முன் வைத்திருக்கின்றோம். – என்றார்.

# அனர்த்த நிலை குறித்து எச்சரிக்கையுடன் செயற்பட மன்னார் மாவட்ட மக்களுக்கு அதிகாரி அறிவுறுத்தல்

(மன்னார் நிருபர்)

வளிமண்டல திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய இன்று 22 ஆம் திகதி சனிக்கிழமை தென் கிழக்கு வங்காள விரிகுடாவில் காற்றழுத்த தாழமுக்கம் ஒன்று உருவாவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன எனவும், ஏற்படுகின்ற அனர்த்தங்கள் குறித்து மக்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும் எனவும் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவி பணிப்பாளர் கே.திலீபன் தெரிவித்தார்.

மன்னார் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மன்னார் மாவட்டத்தில் இதுவரை குறைந்த அளவு மழைவீழ்ச்சியே பதிவாகி உள்ளது. எனினும் குறிப்பிட்ட சில பிரதேசங்களில் அதிக அளவான மழை வீழ்ச்சி பதிவாகி உள்ளது. ஆயினும் அந்த மழை வீழ்ச்சி காரணமாக மாவட்டத்தில் எவ்வித அனர்த்தங்களும் பதிவாகவில்லை.

மன்னார் மாவட்டத்தில் பருவகால மழை தொடர்பாக மாவட்ட மட்ட மற்றும் பிரதேச மட்ட கூட்டம் மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெற்று வருகின்றது. இந்த முன்னாயத்தக் கூட்டங்களின் போது வெள்ள அனர்த்த அபாயங்களை குறைப்பது தொடர்பான முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றிய அறிவுறுத்தல்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அந்த அறிவுறுத்தல்களுக்கு அமைவாக பருவகால மழை காரணமாக ஏற்படுகின்ற வெள்ள அனர்த்தத்தை தடுப்பது தொடர்பான முன்னாயத்த நடவடிக்கைகள் பல்வேறு திணைக்களங்களினால் முன்னெடுக்கப்பட்டு



வருகின்றன.

அதனடிப்படையில் உள்ளூராட்சி சபைகள்,உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் ஏனைய திணைக்களங்கள் ஊடாக வடிகான்கள், கழிவு நீர் வாய்க்கால்கள் என்பன துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. இதன் மூலம் வெள்ள நீர் இலகுவாக கடலைச் சென்றடையக் கூடிய நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தற்போது உயர்தரப் பரீட்சை இடம்பெற்று வருகின்றது. எனினும் பரீட்சை எழுதுகின்ற மாணவர்களுக்கு எவ்வித அனர்த்தங்களும் ஏற்படவில்லை. சிறப்பான முறையில் பரீட்சைகள் இடம்பெற்று வருகின்றன. அனர்த்த முகாமைத்துவ நிலையம் மன்னார் வலயக்கல்வி பணிமனையுடன் தொடர்பில் இருந்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

மன்னார் முருங்கன் கட்டுக்கரை குளத்தில் தற்போது 9.4 அடி நீர்மட்டம் காணப்படுகின்றது. எனினும் இந்தக் குளம் 11.56 அடி அளவிலேயே வான் பாய்வதற்கான நிலை ஏற்படும். இதுவரை மன்னார் மாவட்டத்தில் எவ்வித வெள்ள அனர்த்தங்களும் ஏற்படவில்லை.

தற்போது வளிமண்டல திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய சனிக்கிழமை (இன்றைய தினம்) தென் கிழக்கு வங்காள விரிகுடாவில் காற்றழுத்த தாழமுக்கம் ஒன்று உருவாவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக கூறப்படுகிறது. இந்தத் காற்றழுத்த தாழமுக்கம் தொடர்ந்து 23,24,25 ஆம் திகதிகளில் வங்காள விரிகுடாவின் மத்திய பகுதியை சென்றடையும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்த காலப்பகுதியில் காற்று சுழற்சியாக மாற்றமடையும் என்றும் கூறப்படுகிறது. அந்தக் காலப்பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகும் என்றும், அவ்வேளையில் காற்றின் வேகம் உயர்வாக காணப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்காலப்பகுதியில் அனர்த்தங்களில் இருந்து தம்மைஒ பாதுகாத்துக் கொள்ள மக்கள் விழிப்புடன், அவதானத்துடனும் இருக்குமாறும் வளிமண்டல திணைக்களம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அறிவுறுத்தல்களை பின் பற்றி பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

காற்றின் வேகம் அதிகரித்தால் கடல் கொந்தளிப்பாக காணப்படும். எனவே கடற்தொழிலில் ஈடுபடுகின்ற கடற்தொழிலாளர்கள், அனர்த்த நிலையை கருத்தில் கொண்டு கடற் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். காற்றழுத்த தாழமுக்கம் மற்றும் வெள்ளத்தினால் ஏற்படுகின்ற பாதிப்புகள் குறித்து மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்.

023-2117117 மற்றும் 023-2250133 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடனும் அனர்த்த முகாமைத்துவ மாவட்ட உதவி பணிப்பாளரின் 077-2320529 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொண்டு அனர்த்தம் தொடர்பான தகவல்களை வழங்க முடியும். - என அவர் மேலும் தெரிவித்தார்.

# சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் மயங்கி விழுந்து உயிரிழப்பு

சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். கேணியடி வட்டுக்கோட்டை பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் வட்டுக்கோட்டை வடக்கு சித்தங்கேணியைச் சேர்ந்த கணேசமூர்த்தி நாகேந்திரம் (வயது 68) என்ற ஒரு பிள்ளையின் தந்தையாவார்.

நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் வீதியில் மயங்கி விழுந்து உயிரிழந்த நிலையில் சம்பவ இடத்திற்கு சென்ற யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை வட்டுக்கோட்டை பொலிஸார் நெறிப்படுத்தினர்.





# கோமரங்கடவெல பிரதேச சபையின் தலைவர் 33 வயதில் தமது வயலில் திடீரென மரணம்!

(எஸ்.கீதபொன்கலன்)

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் உள்ள கோமரங்கடவெல பிரதேச சபையின் தலைவர் ரங்கிக்க தர்மதாஸ (வயது 33) நேற்று அதிகாலை திடீரென மரணமடைந்துள்ளார்.

தமது வயலில் காவல் காப்பதற்கு நேற்று இரவு வீட்டில் இருந்து சென்றிருந்த இவர் வயல் வாடியில் உணர்விழந்த நிலையில் காணப்பட்டார். இவரது மரணத்திற்காக காரணம் எதுவென இது வரை தெரியவரவில்லை.

இவர் தனது வயல் காவலுக்காக இரவுகளில் வயலுக்கு செல்வது வழமை என்றும், ஆனால் தினமும் காலையில் வயல் காவலை முடித்து இவர் வீடு திரும்புவார் என்றும் ஆனால் இன்று காலை 8 மணி ஆனபோதும் வீடு திரும்பவில்லைர்ன்றும் கூறப்பட்டது.

அதனால் இவரது உறவினர் ஒருவர் வயலுக்குச் சென்று பார்வையிட்ட போது அவர் உணர்விழந்த நிலையில் காணப்பட்டமையால் அவரை அயலவர்களின் உதவியுடன் கோமரங்கடவெல வைத்திய சாலைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவர் மரணமடைந்து விட்டார் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

திடீர்எனமரணம்ஏற்பட்டுள்ளமையால் மரணவிசாரணை நடத்த வேண்டும் எனப் பொலிஸார் கூறினர். இதன்படி சடலம் திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு திடீர் மரண விசாரணை அதிகாரி மொகமட் சுபைர் சாபியினால் மரணவிசாரணை நடைபெற்றது. இதனை அடுத்து மரண விசாரணை அதிகாரியின் உத்தரவிற்கிணங்க சட்ட வைத்திய அதிகாரியினால் பிரதேச பரிசோதனை நடத்தப்பட்டது. தொடர்ந்து சடலத்தில் இருந்து பெறப்பட்ட மாதிரிகள் கொழும்பு பிரதம சட்ட வைத்திய பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அங்கிருந்து அறிக்கை கிடைத்த பின்னரே மரணத்திற்காக காரணம் தெரியவரும் என மரண விசாரணை அதிகாரி கூறினார்.மேலதிக விசாரணைகளை கோமரங்கடவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதே வேளை மரணமடைந்தவருக்கு கடந்த 8 வருடங்களாக இருதய நோய் இருந்து வருவதாகவும், அதற்காக அவர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்தார் எனவும் மரண விசாரணையின் போது அவரது உறவினர்கள் கூறினர்.






# யாழ் பல்கலை துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்த அனைவரையும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப் பணிப்பு

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்காகக் கோரப்பட்ட விளம்பரத்தின் அடிப்படையில் விண்ணப்பத்துள்ள அனைத்து விண்ணப்பதாரிகளையும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கும் படி, யாழ். பல்கலைக்கழகப் பதிவாளருக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் இருவரது விண்ணப்பங்கள் தொடர்பில் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர் ஒருவர் ஐயவினா எழுப்பியமையால், இருவரது விண்ணப்பங்களையும் ஏற்றுக் கொள்வது தொடர்பான விடயம் பல்கலைக்கழகப் பதிவாளரால் மானியங்கள் ஆணைக்குழுவின் தெளிவுபடுத்தலுக்கு அனுப்பப்பட்டிருந்தது. அதன் படி, இருவரையும் துணைவேந்தர் தெரிவுக்கான நேர்முகத் தேர்வுக்கு அழைக்குமாறு மானியங்கள் ஆணைக் குழு அறிவுறுத்தியுள்ளது. இது தொடர்பான அறிவித்தல் மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கபில செனிவிரத்னவினால் நேற்று வெள்ளிக்கிழமை மாலை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் நான்கு பீடாதிபதிகள், இரண்டு முன்னாள் பீடாதிபதிகள் மற்றும் வெளிவாரி விண்ணப்பதாரி ஒருவர் உட்படத் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்த ஏழு பேருக்குமான நேர்முகத் தேர்வு எதிர்வரும் டிசெம்பர் 7ஆம் திகதி நடைபெறவுள்ள விசேட பேரவைக் கூட்டத்தில் இடம்பெறவுள்ளது.

தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவின் பதவிக்காலம் அடுத்த வருடம் மார்ச் மாதம் 24 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், துணைவேந்தர் தெரிவுக்கான மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழகப் பேரவைச் செயலாளரினால் கடந்த செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் அனைத்தும் கடந்த மாதம் இடம்பெற்ற பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், சுற்றறிக்கைக்கு அமைவாகப் புள்ளிகளை வழங்குவதற்கான விசேட பேரவைக் கூட்டத்தை எதிர்வரும் டிசெம்பர் 7ஆம் திகதி நடாத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதனிடையே விண்ணப்பித்திருந்த பேராசிரியர் ஒருவர் சுற்றறிக்கை நியமங்களைப் பூர்த்தி செய்துள்ளாரா என்பது தொடர்பிலும், வெளியிலிருந்து விண்ணப்பித்த மற்றொருவர் போதிய ஆதாரங்களை இணைக்கத் தவறியமை தொடர்பிலும் எழுந்த ஐயப்பாடுகளை அடுத்து, அவை தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் ஆலோசனை கோரப்பட்டிருந்தது. அதனை ஆராய்ந்த மானியங்கள் ஆணைக்குழு இருவரது விண்ணப்பங்களும் நியமங்களைப் பூர்த்தி செய்துள்ளன எனவும், இருவரையும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்குமாறும் வழிகாட்டுதலை வழங்கியுள்ளது.

# தாந்தாமலை முருகன் ஆலயம் அருகில் மாட்டிய தொல்பொருள் பதாகையை உடன் அகற்றுங்கள்

## பட்டிப்பளை பிரதேசசபையின் தவிசாளர் எச்சரிக்கை அறிவிப்பு




**(வாலகிருஸ்ணா)**

மட்டக்களப்பு தாந்தாமலை முருகன் ஆலயத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள தொல்பொருள் பதாகையை எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் அகற்றாவிட்டால் தொல்பொருள் திணைக்களத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேசசபையின் தவிசாளர் இ.திரேசகுமாரன் தெரிவித்தார்.

மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேசசபையின் எந்தவித அனுமதியும் பெறப்படாமல் இந்தப் பெயர்ப்பலகை நிறுவப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் தொல்பொருள் திணைக்களத்திற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று மாலை பிரதேசசபையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர் –

மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட தாந்தாமலை கிராமத்திலே அமைந்திருக்கின்ற எங்களுடைய பாரம்பரியமான, பூர்வீகமாக எங்களுடைய இந்துமதத்தை பேணி பாதுகாக்கின்ற வழிபாட்டுத்தலமாக இயங்குகின்ற முருகன் ஆலயத்தில் நேற்றைய தினம் யாருக்கும் தெரியாமல் கள்ளத்தனமாக வந்து தொல்பொருள் திணைக்களம் தொல்பொருள் இடம் என்ற பெயர்ப்பலகையை மாட்டிவிட்டு சென்றிருக்கின்றார்கள்.

உண்மையாகவே அவர்கள் ஒரு திணைக்களமாக நாங்கள் பார்க்கவில்லை. ஏன் என்று சொன்னால் ஒரு திணைக்களத்துக்கு தெரிய வேண்டும், இந்தப் பிரதேசத்திலே பிரதேச சபையின் ஊடாக பிரதேச சபையின் அனுமதி எடுத்த பின்பு தான் ஒரு பெயர் பலகை மாட்டலாம் என்று. ஆகவே அதை நாங்கள் ஒரு திணைக்களமாகப் பார்க்கவில்லை. அவர்கள் ஒரு பௌத்த மதத்தினுடைய கொள்கைகளை பரப்புகின்ற ஒரு திணைக்களமாகத்தான் நாங்கள் அதை பார்க்கின்றோம்.

இது ஒரு மிகவும் கண்டிக்கத்தக்க விடயம். இது சிங்கள, பௌத்த மக்களை பாதுகாக்கின்ற ஒரு திணைக்களமாக மட்டுமல்ல அவர்களுடைய அந்த மதத்தை பரப்புகின்ற ஒரு திணைக்களமாகவும் நாங்கள் இதை பார்க்கின்றோம்.

உடனடியாக அவர்கள் அந்தொ பெயர் பலகையை அகற்ற வேண்டும். அவ்வாறு அகற்றாத பட்சத்தில் இன்று நாங்கள் அதனை சென்று பார்வையிட்டு வந்திருக்கின்றோம். ஆகவே உடனடியாக அவை மாற்றப்பட வேண்டும். அகற்றாத பட்சத்தில் எமது மக்கள் இணைந்து மக்கள் போராட்டம் வெடிக்கும். அவர்களுக்கு தெரிய வேண்டும் கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் திருகோணமலையில் நடைபெற்ற விடயங்கள். கிழக்கு மாகாணத்தை மையப்படுத்தி அவர்களுடைய இந்தச் செயற்பாடுகள் நடைபெற்று கொண்டு இருக்கின்றன.

இதனை நாங்கள் எந்த ஒரு வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏற்றுக் கொள்ளவும் மாட்டோம். எங்களுடைய மக்கள் வாழும் எங்களுடைய பிரதேசம் இது. நமது பிரதேசத்தில் இருக்கின்ற இந்து ஆலயங்களை நாங்கள் மையப்படுத்திய பகுதி இது. 99 வீதம் இந்து மத மக்கள் வாழுகின்ற ஒரு இடமாக இந்தஓ பிரதேசம் காணப்படுகின்றது.

ஆகவே இவ்வாறான ஒரு நயவஞ் சகமாக அவர்கள் செயல்படக் கூடாது.

நான் இன்று உடனடியாக உரிய திணைக்களத்திக்கு எழுத்து மூலமாக ஒரு கடிதம் ஒன்றினை அனுப்பி இருக்கின்றேன். ஆகவே இவர்கள் உடனடியாக வந்து அந்த பெயர் பலகையை அகற்றாத பட்சத்தில் நான் திங்கட்கிழமைக்கு பிற்பாடு அதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்து இருக்கின்றோம். – என்றார்.








# தென்னாபிரிக்கா வந்தடைந்த மோடிக்கு உற்சாக வரவேற்பு

## ஜி 20 மாநாட்டில் பங்கேற்பு

ஜி 20 உச்சி மாநாட்டில் பங்கேற்க தென்னாபிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகருக்கு சென்றடைந்த பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜி 20 அமைப்பில் அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய ஒன்றியம், இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், ஜப்பான், சீனா, இந்தியா, கனடா, துருக்கி, தென்னாபிரிக்கா, சவூதி அரேபியா, தென்கொரியா, மெக்சிகோ, இத்தாலி, இந்தோனேசியா, பிரேசில், அவுஸ்திரேலியா, அர்ஜென்டினா ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

இந்த ஆண்டு ஜி20 அமைப்புக்கு தென்னாபிரிக்கா தலைமை வகிக்கிறது. இதன்படி அந்த நாட்டின் ஜோகன்னஸ்பர்க் நகரில் இன்று ஜி20 உச்சி மாநாடு தொடங்குகிறது. இதில் பங்கேற்க பிரதமர் மோடி நேற்று டில்லியில் இருந்து விமானத்தில் ஜோகன்னஸ்பர்க் நகருக்கு சென்றார். அங்கு பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதையொட்டி அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில், “ஆபிரிக்காவில் நடைபெறும் முதல் ஜி20 உச்சி மாநாடு இது என்பதால் சிறப்புமிக்க உச்சிமாநாடாக இருக்கும். கடந்த 2023 ஆம் ஆண்டில் ஜி20 அமைப்புக்கு இந்தியா தலைமை வகித்தது. அப்போது ஆபிரிக்க ஒன்றியம் ஜி20 அமைப்பில் உறுப்பினராக இணைக்கப்பட்டது.

தற்போதைய உச்சி மாநாட்டில் உலகளாவிய பிரச்சினைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்படும். இந்த ஆண்டு ஜி20 உச்சி மாநாட்டின் கருப்பொருள் ‘ஒற்றுமை, சமத்துவம் மற்றும் நிலைத்தன்மை ஆகும். ‘ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம் என்ற இந்தியாவின் தொலைநோக்குப் பார்வையை மாநாட்டில் எடுத்துரைப்பேன்.

மாநாட்டில் பங்கேற்கும் பிற நாடுகளின் தலைவர்களுடன் முக்கிய ஆலோசனை நடத்த உள்ளேன். மாநாட்டின் ஒரு பகுதியாக 6 ஆவது இந்தியா -பிரேசில்-தென்னாப்பிரிக்கா (ஐ.பி.எஸ்.ஏ) உச்சி மாநாட்டில் பங்கேற்கிறேன்.

தென்னாபிரிக்காவில் வசிக்கும் இந்திய வம்சாவளியினரையும் சந்தித்துப் பேசுவேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

வெள்ளையின மக்களை தென்னாப்பிரிக்க அரசு கொடுமைப்படுத்துவதாக கூறி அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், ஜி20 மாநாட்டை புறக்கணித்துள்ளார்.

# விஜய் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளார்

## அப்பா கருத்து



விஜய் மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார் என்று தமிழக சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் நேற்று கருத்து தெரிவித்த அவர்,

“இந்திய அரசமைப்புச் சட்டப்படி சட்டப் பேரவையில் நிறைவேற்றிய மசோதா குறித்து எவ்வளவு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அந்தளவுக்கு ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும். 2 ஆண்டு காலமாக மசோதாவை ஆளுநர் நிலுவையில் வைத்து வந்துள்ளார்.

கிடப்பில் போடப்படும் மசோதாவை நிறைவேற்ற கால நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் ஆளுநர் விருப்பு வெறுப்பு இல்லாமல் செயல்படவேண்டும் என்றுதான் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் விளக்கத்தையே நீதிமன்றம் கொடுத்துள்ளது. வழக்குக்கு தீர்ப்பு கொடுக்கவில்லை.

அந்த வழக்கில் தடை, தவறு என எதையும் நீதிமன்றம் சொல்லவும் இல்லை. காலக்கெடு கொடுப்பதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்பதையே நீதிமன்றம் சொல்லி உள்ளது. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அதனை செய்து கொடுங்கள் என்றுதான் சொல்லி உள்ளார்கள்.

பா.ஜ.க. ஆட்சி செய்யாத மாநிலங்களில் அனைத்து திட்டங்களையும் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. விஜய் மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளார். அவர் மீண்டும் பிரச்சாரத்திற்கு செல்கிறார் என்பதை சொல்லி அவரை நெருக்கடிக்கு உள்ளாக்க வேண்டாம்.” என்று தெரிவித்தார்.

# பிரித்தானியாவில் வசிக்கின்ற ஐவரில் ஒருவர் வெளிநாட்டவர்

## ஆய்வில் தகவல்


பிரித்தானியாவில் வசிக்கும் ஒவ்வொரு ஐந்து பேரில் ஒருவர் வெளிநாடுகளில் பிறந்தவர்கள் என அண்மைய ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்தத் தகவல் வெளியானதைத் தொடர்ந்து, நாட்டில் வசிக்கும் வெளிநாட்டில் பிறந்த சனத்தொகையின் உண்மையான அளவைப் பற்றிப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்த "அவசர சனத்தொகைக் கணக்கெடுப்பு" நடத்தப்பட வேண்டும் என வெளிநாட்டு அறிக்கைகள் கோரியுள்ளன.

இந்த மாற்றத்திற்குக் காரணமான ஒரு விடயம், பிரித்தானிய நாட்டவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது அதிகரித்தமையாகும்.

பிரித்தானியாவின் சனத் தொகையில் சுமார் 19.6 வீதமானோர் வெளிநாடுகளில் பிறந்தவர்கள் என்பது இங்குத் தெரிய வந்துள்ளது.

இது 2021ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பில் பதிவான 16 வீதத்தை விட அதிகமாகும்.




2021 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் பிரித்தானியர் அல்லாத குடிமக்களின் நிகர வருகை 2.9 மில்லியன் ஆக இருந்தது என்று தொடர்புடைய புள்ளிவிபரங்களைத் திருத்திய பின்னர் தெரியவந்துள்ளது.

வெளிநாடுகளில் பிறந்த மொத்த சனத்தொகை 13.6 மில்லியன் வரை அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

# 'மிஸ் யுனிவர்ஸ்' அழகிப் போட்டியின் ஃபாத்திமா போஷ் மகுடத்தைச் சூடினார்




தாய்லாந்தின் பேங்காக் நகரில் நடைபெற்ற "மிஸ் யுனிவர்ஸ்" அழகிப் போட்டியின் இறுதிச் சுற்றில், மெக்சிகோ நாட்டைச் சேர்ந்த 25 வயதான ஃபாத்திமா போஷ் மகுடத்தைச் சூடினார்.

எனினும், இந்தப் போட்டி நிகழ்வு பல சர்ச்சைகள் நிறைந்த பருவமாக அமைந்திருந்த நிலையில், இந்தத் தீர்ப்பு வெளியாகியுள்ளது.

நவம்பர் மாதத் தொடக்கத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்வின்போது, தாய்லாந்து அதிகாரி ஒருவர் தன்னை பகிரங்கமாகத் திட்டி, அவருக்கு ஆதரவளிக்கும் போட்டியாளர்களைத் தகுதி நீக்கம் செய்யப்போவதாக அச்சுறுத்தியதால், ஃபாத்திமா போஷ் அந்த நிகழ்விலிருந்து வெளிநடப்பு செய்தார்.

இந்த நிகழ்வுக்கு ஒரு வாரத்திற்குப் பிறகு, போட்டியிலிருந்து இரண்டு நடுவர்கள் பதவி விலகினர் அவர்களில் ஒருவர், போட்டி அமைப்பாளர்கள் முடிவுகளை திருத்தம் செய்ததாக பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார்.

உலகிலேயே நீண்ட காலமாக நடைபெறும் அழகிப் போட்டிகளில் ஒன்றான "மிஸ் யுனிவர்ஸ்", பார்வையாளர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதால் அதன் பொருத்தப்பாடு குறித்து கேள்விகளை எதிர்கொண்டு வரும் நிலையில், இந்த சர்ச்சைகள் எழுந்துள்ளன.

ஃபாத்திமா போஷின் வெற்றியானது சமூக ஊடகங்களில் உடனடியாகக் கருத்துக்களைப் பிளவுபடுத்தியது.

முந்தைய சர்ச்சையைச் சரிசெய்வதற்காக அமைப்பாளர்கள் அவருக்கு மகுடத்தை வழங்கினார்களோ என்று சிலர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்த போட்டியில் இரண்டாம் இடம் தாய்லாந்தின் பிரவீனர் சிங் மூன்றாம் இடம் வெனிசுவேலாவின் ஸ்டெபனி அபாசாலி ஆகியோரும் அடுத்தடுத்த இடங்களில் பிலிப்பைன்ஸின் மா அஹ்திசா மனலோ மற்றும் கோட் டி ஐவரியின் ஒலிவியா யாஸ் ஆகியோர் இடம்பிடித்தனர்.

# சீனாவுக்காக உளவு பார்த்த 7 பேருக்கு ஆயுள் தண்டனை

சீனாவுக்கு உளவு பார்த்த பிலிப்பைன்ஸின் முன்னாள் முதல்வர் உட்பட 7 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

பிலிப்பைன்ஸின் வடக்கு பிராந்தியமான பம்பன் நகர முன்னாள் முதல்வருக்கே இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சீனாவைச் சேர்ந்த இவர் சட்ட விரோதமாக பிலிப்பைன்ஸ் குடியுரிமையைப் பெற்று அங்கு முதல்வராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மேலும் சீனாவுக்குச் சொந்தமான ஒரு சூதாட்ட நிறுவனத்தின் தலைவராகவும் அவர் பணியாற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்மூலம் வியட்நாம், பிலிப்பைன்ஸ், மலேசியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 700 க்கும் மேற்பட்டோர் மோசடிக்கு உள்ளாகியுள்ளனர்.

எனவே சீனாவுக்கு உளவு பார்த்ததாக கூறி ஆலிஸ் குவோ



உடனடியாக பணி நீக்கம் செய்யப்பட்டார்.

இந்த வழக்கு விசாரணை தற்போது நிறைவடைந்த நிலையில் அவர் உட்பட அவருக்கு உதவியவர்களுக்கும் ஆயுள் தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.





# 1,000 போதை மாத்திரைகளுடன் நால்வர் நேற்று குருநகரில் கைது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் 1,000 போதை மாத்திரைகளுடன் நால்வர் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி போதைப்பொருள்கள் பாடசாலை மாணவர்களுக்கு விற்பனையாகவிருந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாண பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் அதிகாரி செனவிரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.



# சிறிதரன் எம்.பியின் முகநூல் பக்கப் பதிவு குறித்து வலி. வடக்கு பிரதேச சபைக் கூட்டத்தில் சர்ச்சை

(எஸ்.நிதர்ஷன்)

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் முகநூல் பக்கத்தில் அரசாங்கம் காணியை சுவீகரிக்கப் போவதாக தவறான தகவல் பதிவிடப்பட்டதாக தெரிவித்து வலிகாமம் வடக்கு பிரதேச சபை உறுப்பினரொருவர் சபை அமர்வில் சர்ச்சையைக் கிளப்பினார்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

சபையில் காணி விவகாரம் தொடர்பாக பேசப்பட்டபோது எழுந்த தேசிய மக்கள் சக்தியின் பிரதேச சபை உறுப்பினரொருவர், அண்மையில் தெல்லிப்பழை வித்தகபுரம் பகுதிக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், காணியை அரசாங்கம் சுவீகரிக்கப்போவதாக தகவலை பதிவிட்டுள்ளார் எனவும், அவ்வாறு அரசாங்கம் செயற்படவில்லை எனவும், சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் காணிகள் அமைச்சரவை அனுமதியுடன் பிரதேச செயலகத்தினால் காணி இல்லாத மக்களுக்கு பிரித்து கொடுக்கப்படப் போவதாகவும் தெரிவித்தார். அத்துடன் அந்த பாராளுமன்ற உறுப்பினரின் தவறான முகநூல் பதிவுக்கு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றவும் கோரினர்.

இயங்காத சீமெந்து கூட்டுத்தாபனத்தின் காணியில் சிலர் தோட்டம் செய்தார்கள். அவர்களுக்கு கடிதம் அனுப்பிய பிரதேச செயலகம், மீள் குடியேற்றம் செய்யப் போவதாகவும் உடனடியாக காணியை விடவும் கோரியிருந்தது. இதற்காகவே நாடாளுமன்ற உறுப்பினரை அழைத்து கதைத்திருந்தோம். தோட்ட காணிகளை விட்டு ஏனையவற்றில் மீள் குடியேற்றம் செய்யுமாறே அப்போது கோரப்பட்டது என்றார்.

தொடர்ந்தும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் அந்த விடயத்திற்கு கண்டன தீர்மானத்திற்கு முன்மொழிந்த நிலையில் ஏனைய சில உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அவ்வாறு தீர்மானம் கொண்டு வர முடியாது என்றும் தெரிவித்தனர்.

இந்நிலையில் முகநூல் பதிவை வைத்து ஒரு முடிவுக்கு வர முடியாது.

நாடாளுமன்ற உறுப்பினர் இது தொடர்பில் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகத்துக்கு கடிதம் அனுப்பியிருந்தால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை தவறான தகவல்களுக்கு தீர்மானம் நிறைவேற்றுவதாக இருந்தால் அமைச்சர் பிமல் ரத்நாயக்க வடக்கில் இராணுவம் நடத்தும் சிகையலங்கார நிலையங்கள் தொடர்பாக சொன்ன கருத்துக்கும் கண்டனம் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என இலங்கை தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அமைச்சர் பிமல் சொன்னது தவறு என ஏற்றுக்கொண்ட தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், அதை நாங்கள் தவறு என ஏற்கும் போது நீங்கள் இதை தவறு என ஏன் ஏற்கமுடியாது என கேள்வி எழுப்பினர்.

இது 1970ம் ஆண்டளவில் சீமெந்து கூட்டுத்தாபனத்திற்கு குத்தகையில் வழங்கப்பட்ட காணி. அந்த காணிகளே தற்போது பகிரப்படவுள்ளன. காணிகள் மக்களுக்கு பங்கிட்டு வழங்கப்படுகிறதே யொழிய அது சுவீகரிப்பு அல்ல. நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் எங்களுடன் கதைக்கும் போது அதை பற்றி சொல்லவில்லை. ஊடகங்களுக்கும் அவ்வாறு கருத்து தெரிவிக்கவில்லை. முகநூலில் வந்திருந்தால் அதை வேறு உதவியாளர்கள் யாரும் செய்திருக்க முடியும் என தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார். இதனையடுத்து நிலைமை சுமூகமானது.

# ஒற்றையாட்சிக்குள் தீர்வுக்குச் சம்மதித்து மாவீரர்களுக்கு தமிழரசுக் கட்சி துரோகம்

## சைக்கிள் கட்சியின் செல்வராசா கஜேந்திரன் காட்டம்

(கனகராசா சரவணன்)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க விடம் தமிழரசுக் கட்சி தமிழர்களுடைய 70 வருட சமஷ்டிக் கோரிக்கை, வடகிழக்கு இணைப்பு, சுயநிர்ணய உரிமை என்பவற்றைக் கைவிட்டு, பௌத்தம் அரச மதம் என்பதை ஏற்றுக் கொண்டு, ஒற்றையாட்சிக்குள் தீர்வுக்கு சம்மதம் தெரிவித்துள்ளது. எனவே இது மாவீரர்களுக்கு செய்யப்படும் மிகப் பெரும் அநீதி. ஒற்றையாட்சியை எதிர்த்து போராடியவர்கள் சமூகவிரோதிகள் என இலங்கையின் வரலாறு எழுதும். இந்த மண்ணில் முற்று முழுதாக தமிழர்கள் அழிக்கப்படுவார்கள் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் கனடா வாழ் தாயக உறவுகளின் பேராதரவுடன் மாவீரர்களின் பெற்றோரை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவித்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர்களின் தாயகமான வடகிழக்கில் தமிழர்கள் செய்து வந்த ஆட்சி உரிமையை 1502 ஆம் ஆண்டு போத்துகேயர்களிடம் இழந்தோம். அதனை தொடர்ந்து 1658ஆம் ஆண்டு ஒல்லாந்தரிடம் இழந்தோம். 1796 ம் ஆண்டு ஆங்கிலேயரிடம் இழந்தோம். 1948 இந்த ஆங்கிலேயர்கள் இந்த ஆட்சி உரிமையை சிங்களவர்களிடம் கையளித்தனர்.

இவ்வாறு 450 ஆண்டுகள் அடிமைகளாக வாழ்ந்த எங்களுடைய தேசத்தின் ஆட்சி அதிகாரங்களை 1948 ஆங்கிலேயர்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட சிங்களப்பெரும்பான்மை ஆட்சியாளர்கள் இந்த முழு நாட்டையம் ஆட்சி செய்ய அதிகாரத்தை கையில் எடுத்துக் கொண்டார்கள்

அவ்வாறு எடுத்துக் கொண்டவர்களுக்கு வடக்கு – கிழக்கு தங்களுக்குச் சொந்தமில்லை என்பதும், வரலாற்று ரீதியாக அது தமிழர்களுடைய இராச்சியம் என்பதும் தெரியும். ஆகவே தமிழர்களால் ஆளப்பட்ட வடகிழக்கை தமிழர்களிடம் இருந்து பறித்தெடுக்க வேண்டும் என்பதற்காக இந்த நாட்டை தாங்கள் ஆளும் சந்தர்ப்பம் கிடைத்ததை பயன்படுத்தி பொலிஸ், இராணுவம் அதிகாரங்களை தங்களின் கைகளில் வைத்துக் கொண்டு வடகிழக்கில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களையும் பௌத்த மயமாக்கலையும் செய்து எங்கள் மக்களை மண்ணில் இருந்து விரட்டியடித்தனர். அந்த நிலங்கள் கபளீகரம் செய்ய முற்பட்ட போது, எங்கள் மக்கள் என்ன செய்வது எனத் தெரியாது சிதறி ஓடிக் கொண்ட போது, அழிக்கப்பட்டுக் கொண்டிருந்த போது, அந்த அழிவில் இருந்து தற்பாது



காப்புக்காக மாத்திரம் தான் இந்த இளைஞர்கள் தங்கள் கைகளில் ஆயுதங்களை ஏந்தினார்கள்.

ஒருபோதும் தமிழ் மக்கள் அப்பாவி சிங்கள மக்களுக்கோ, பௌத்த மத்துக்கோ. முஸ்லிம் மக்களுக்கோ எதிராக ஒருபோதும் ஆயுதம் ஏந்த வில்லை. இதை தெளிவாக எல்லோரும் விளங்கி கொள்ள வேண்டும்.

இந்த போராட்டத்தின் ஊடாக தமிழர்கள் இழந்த 70 வீதமான நிலப்பிரதேசம் உங்களுடைய பிள்ளைகள் உயர் கொடுத்து மீட்டெடுத்து 2002 ம் ஆண்டு தமிழர்களுடையன நிலப்பிரதேசம் தமிழர்களுடைய ஆளுமைக்குள் வந்தது. தம்மை தாமே ஆளும் ஒரு நடைமுறை அரசு கட்டியெழுப்பப்பட்ட நிலைமைய பறைசாற்றிக் கொண்டனர்.

உங்களுடைய பிள்ளைகள் உயிர் கொடுத்து 2002 ஆம் ஆண்டு இராணுவத்துக்கு ஏற்படுத்திய இழப்பினால் நின்று போரிட முடியாமல் மண்டியிட்டு சந்திரிக்கா அரசு சமாதான உடன்படிக்கை வந்தது. அவ்வாறு அகதிகளாகி, பசி பட்டினியோடு அனைத்தையும் இழந்து உங்களுக்கு உங்களுடைய பிள்ளைகளின் தியாகத்தால் சமாதானம் ஏற்பட்ட போது, இந்த அநுரகுமார திஸநாயக்க வுடன் சேர்ந்தவர்கள் சிங்கள மக்கள் மத்தியில் கிராமம் கிராமமாக சென்று, இனவெறியை ஊட்டி, இளைஞர்களை இராணுவத்துக்குச் சேர்த்தனர். அவ்வாறே இராணுவ முகாம் முகாமாக சென்று இராணுவத்துக்கு உசுப்பேற்றி போருக்குத் தயார் படுத்தினார்கள்.

2006 அந்த போர் தான் 2009 முள்ளிவாய்க்காலில் இனழிப்பாக முடிந்தது. ஒன்றரை இலட்சம் பேர் இந்த முள்ளிவாய்க்காலில் அழிக்கப்பட்டார்கள் என்றால் இந்து ஜே.வி.பியின் அநுரா, விஜித ஹேரத், சந்திரசேகரம் போன்றோர் சிங்கள கிராமம் கிராமங்களாக சென்று இனவெறி ஊட்டி திரட்டிய சிங்கள இளைஞர்கள் மேற்கொண்ட இன அழிப்புத்தான் 2009 முள்ளிவாய்க்காலில் இனவழிப்பாக முடிந்தது.

உங்களுடைய பிள்ளைகள் உயிர் கொடுத்து ஏற்படுத்திய அமைதிச் சூழலை ஜேபிவியின் தூண்டுதலால் அழித்தனர். கடந்த 30 வருடமாக உங்கள் பிள்ளைகள் இந்த தமிழ் தேசத்தை கட்டியெழுபிய சிற்பிகள் என்பதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தியாகங்களை செய்த உங்களுடைய பிள்ளைகளை அழித்துவிட்டு பயங்கரவாதிகளை அழித்துவிட்டோம் இந்த நாடு பௌத்த, சிங்கள நாடு என ஒற்றையாட்சியை திணிப்பதற்கான முயற்சி நடந்து கொண்டிருக்கிறது

உங்களுடைய பிள்ளைகள் 30 ஆண்டுகள் ஆயுதம் ஏந்தி போராடியது எதற்காக என்றால் இந்த சிங்கள – பௌத்த மேலாதிக்கத்தை அழிக்க வேண்டும் என்பதற்காகவும் ஒற்றையாட்சி முறையை நீக்கி தமிழர்களுடைய தேசியம், சுயநிர்ணயம் என்றடிப்படையிலான தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதற்காகவே. அதற்காகவே உங்களுடைய பிள்ளைகள் உயிர் கொடுத்திருந்தார்கள்.

முள்ளிவாய்கல் மற்றும் வாகரையில் உங்கள் பிள்ளைகளிடம் இலங்கை அரசு கேட்டது சிங்கள – பௌத்த மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டு, ஒற்றையாட்சியை, பௌத்தம் அரச மதம் என்பதையும் ஏற்றுக் கொண்டு ஒற்றையாட்சிக்கு உட்பட்ட மாகாணசபையை தீர்வாக ஏற்றுக் கொள்வதாக இருந்தால் போரை நிறுத்தி உங்களை காப்பாற்றுகிறேன் என்றனர்.

ஆனால் உங்கள் பிள்ளைகள் திட்டவட்டமாக சொன்னார்கள். வடக்கு – கிழக்கு இணைந்த தாயகம் அங்கீகரிக்கப்பட்டு, தமிழர்களுடைய தேசியம், சுயநிர்ணயம் அங்கீகரிக்பட்டால் மாத்திரம் தான் ஏற்றுக் கொள்ள முடியும் என உறுதியாக நின்றனர். அதுதான் 2009 மிகப் பெரும் உயிர் தியாகத்துடன் அந்த போராட்டம் முடிவடைவதற்குக் காரணமாக இருந்தது.

உங்களுடைய பிள்ளைகள் ஒற்றையாட்சியை ஏற்க மறுத்து உயிர் கொடுத்து 15 ஆண்டுகள் இன்று கடந்துள்ள நிலையில் எங்களுடைய மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர்களின் ஆதரவுடன் இந்த அஉரகுமார அரசாங்கம் ஒற்றையாட்சி அரசமைப்பை கொண்டு வந்து நிறைவேற்ற தயாராகி கொண்டுள்ளனர். ஆகவே மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். அதை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள கூடாது

19 ஆம் திகதி ஜனாதிபதிக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையே சந்திப்பு இடம்பெற்றது இதில் தமிழர்களுடைய 70 வருட கால சமஷ்டி கோரிக்கையை கைவிட்டு வடகிழக்கு இணைப்பு, சுயநிர்ணய உரிமையை கைவிட்டு, பௌத்தம் அரச மதம் என்பதை ஏற்றுக் கொண்டு ஒற்றையாட்சிக்குள் ஒரு தீர்வுக்கு சம்மதம் தெரிவித்து விட்டு வந்துள்ளனர்

அது மிகப் பெரும் அநியாயம். அது மாவீரர்களுக்கு செய்யப்படும் ஒஓர் அநீதி. இந்த ஒற்றையாட்சி நிராகரிக்கப்பட்டு, தமிழர்களுடைய தேசம் அங்கீகரிக்கப்பட்டு, தீர்வு எட்டப்பட்டால் நீங்கள் மாவீரகளுடைய அம்மாக்கள், அப்பாக்கள். ஆனால் ஒற்றையாட்சி திணிக்கப்பட்டு தமிழர்கள் ஏற்றக் கொள்ளப்படுவார்களாக இருந்தால் ஒற்றையாட்சியை எதிர்த்து போராடியவர்கள் சமூகவிரோதிகள் என இலங்கையின் வரலாறு எழுதும் என்பதுடன் இந்த மண்ணில் நீங்கள் முற்று முழுதாக அழிக்கப்படுவீர்கள்.

அநுர சட்டத்திற்கு அனைவரும் சமம் என தெரிவித்து திருகோணமலையில் புத்தர் சிலையை நிறுவி இருக்கிறார். எனவே தாம் பௌத்தத்திற்கு அடிமை என்பதை அவர் நிரூபித்துள்ளார். –

# தரமான பெரிய வெங்காயத்தை 150 ரூபா வரை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானம்

## பிரதி வர்த்தக அமைச்சர் ஆர்.எம்.ஜயவர்தன தகவல்




2026 ஆம் ஆண்டு, தரமான பெரிய வெங்காயத்தை 150 ரூபா வரை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக பிரதி வர்த்தக அமைச்சர் ஆர்.எம். ஜயவர்தன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அத்துடன், தரமான நெல்லை 120 ரூபாய்க்கு கொள்வனவு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விவசாயிகள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் பிரதியமைச்சர் ஆர்.எம்.ஜயவர்தன இதனை கூறினார்.

"எதிர்க்கட்சித் தலைவர் விவசாயிகளின் கஷ்டங்கள் தொடர்பில் கருத்துக்களை வெளியிடுகிறார்.

தமது ஆட்சிக் காலத்தில் விவசாயிகள் மிகவும் நெருக்கடியான நிலையில் இருந்த போது அவர்களுக்கு எதனையும் செய்யாத எதிர்க்கட்சித் தலைவரே தற்போது விவசாயிகள் தொடர்பில் குரல் எழுப்புகின்றார்." என பிரதி அமைச்சர் ஆர்.எம். ஜயவர்தன தெரிவித்துள்ளார்.



# மின்சார சபை மறுசீரமைப்பின் உச்ச பயன் நாட்டு மக்களுக்கு

மின்சார சபை மறுசீரமைப்பின் உச்ச பயன் நாட்டு மக்களுக்கு வழங்கப்படும் என்று அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

அத்துடன், மின்சார சபையின் பணிகள் மற்றும் பொறுப்புக்களைப் பூரண அரச அங்கீகாரம் பெற்ற நான்கு நிறுவனங்களிடம் கையளிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்மானம் அடுத்த ஆண்டு முதல் முறையாகச் செயற்படுத்தப்படும் என்றும் வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வலுசக்தி அமைச்சுக்கான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, திருகோணமலை எண்ணெய் தாங்கிகளில் 24 தாங்கிகள் இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனத்தின் பராமரிப்பில் உள்ளதாகவும், 14 தாங்கிகள் இந்தியாவின் ஐ.ஓ.சி நிறுவனத்தின் பராமரிப்பில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மூச்சு விட சிரமப்பட்ட குடும்ப பெண் மரணம்

மூச்சு விட சிரமப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்ப பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் மாட்டின் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டெரின்ரன் மாலிலி யோகராசா (வயது 58) என்பவராவார்.

குடும்பத்தினர் இத்தாலியில் உள்ள நிலையில் மேற்படி பெண் அடிக்கடி ஊருக்கு வந்து செல்வார்.

ஊருக்கு வந்த நிலையில், கடந்த வியாழக்கிழமை மூச்சுவிட சிரமப்பட்ட நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை யாழ்ப்பாண பொலிஸார் நெறிப்படுத்தினர்.



# இன்றைய ராசி பலன்கள்- 22.11.2025




இன்றைய நாள் சாதகமான விளைவுகளையும் மகிழ்ச்சியான தருணங்களையும் அளிக்கும். நீங்கள் பொழுதுபோக்கு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மகிழ்ச்சியடைவீர்கள்.

உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படும். அவர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். பணியில் உங்கள் செயல்திறன் திருப்திகரமாக இருக்கும்.உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இது இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்பட வழி வகுக்கும்.

நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். பணத்தை உங்கள் தேவைக்கேற்ப பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.




இன்று உற்சாகமாக இருப்பீர்கள். இன்று நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். புதிய மனிதர்களை சந்திப்பீர்கள். இன்று முக்கியமான முடிவுகள் எடுக்கலாம்.

நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.உங்களின் சீரிய அணுகுமுறை மூலம் கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் திருப்தியான மனநிலை காரணமாக நீங்கள் உங்கள் துணையுடன் சிறந்த நட்பான அணுகுமுறை கொள்ள நேரலாம்.இன்று நிதிநிலை மிகவும் திருப்திகரமாக இருக்கும். அதிக பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆற்றல் மூலம் உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.




உங்களின் ஆர்வத்தை மேம்படுத்தும் திட்டங்களை இன்று எடுக்கலாம். இசை கேட்பது மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுவது போன்றவை ஆறுதல் அளிக்கும். நம்பிக்கையான அணுகுமுறை சிறந்த பலனளிக்கும்.

இன்று அதிகப் பணிகள் காணப்படுவதால் பணிகளை சரியான குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. திட்டமிட்டு கவனமுடன் பணியாற்றினால் சிறப்பாக பணியாற்றலாம்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்படும். இந்த வேறுபாட்டை நீக்க நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். இன்று மகிழ்ச்சியாக இருக்க அவருடன் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும்.

பணபுழக்கம் குறைவாக இருக்கும். வீண் விரயங்களை தவிர்க்க பணத்தை கவனமாக செலவு செய்ய வேண்டும்.உங்களின் மன உளைச்சல் காரணமாக நீங்கள் கால் வலியால் அவதிப்படுவீர்கள்.




இன்று உங்கள் செயல்களில் கவனம் தேவை. சிறப்பாக திட்டமிட்டால் பதட்டமின்றி செயல்படலாம். முக்கிய முடிவுகளை தள்ளிப்போடவும்.

பணியிடத்தில் சகபணியாளர்களுடனான உறவுமுறையில் சில குழப்பங்கள் காணப்படும். அதனை சமாளித்து பணியாற்ற இன்று பொறுமை அவசியம்.

இன்று சிறிய விஷயங்களைப் பெரிதாகக் கொள்வீர்கள். உங்கள் குடும்ப விஷயத்தில் உங்கள் துணையுடன் சில சிக்கல்களை சந்திக்க நேரும். மனம் திறந்து பேசி வேறுபாட்டை களைவதன் மூலம் உறவில் நல்லிணக்கமும் புரிந்துணர்வும் ஏற்படும்.

நிதிநிலை சிறப்பாக இருக்காது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் பணத்தை கடனாக வாங்குவீர்கள்.




உங்களின் திறமையான தகவல் பரிமாற்றம் மூலம் வெற்றிகரமான பலன் காண்பீர்கள். ஆன்மீக சொற்பொழிவு மற்றும் இறை மந்திரங்கள் ஜெபித்தல் ஆகியவற்றில் ஈடுபடுங்கள். இதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணியில் சிறந்த நல்ல பலன்கள் கிடைக்கும். பணியிடத்தில் உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் இருவரிடையே காணப்படும் நல்ல புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் வெளிப்படையாக மனம் திறந்து பேசுவீர்கள்.

நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். பணத்தை ஆன்மீக விஷயங்களுக்கு செலவு செய்யலாம்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்திருக்கும். ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.




இன்று உங்களிடம் வருத்தமான மன நிலை காணப்படும். உங்கள் முயற்சிகள் மூலம் வெற்றிகரமான பலன்கள் கிடைக்காது. இதனை சுமையாகக் கருதுவீர்கள். முறையாக திட்டமிட்டால் வெற்றி பெறலாம்.

நல்ல வாய்ப்பு வழங்கும் வேலை மாற்றத்தை நீங்கள் வரவேற்கலாம். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க நீங்கள் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் துணையை மகிழ்விக்க சம்பவங்களை தீவிரமான போக்கில் எடுத்துக் கொள்வதை தவிர்க்க வேண்டும்.

தேவையற்ற செலவுகள் கவலையை அளிக்கும்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்காது. தேவையற்ற கவலைகள் காரணமாக இன்று உங்கள் திறன் குறையும். என்றாலும் நம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி பெறலாம்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் அணுகுமுறையில் கவனம் தேவை.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் ஏற்படலாம். எனவே உங்கள் துணையுடன் பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

தேவையற்ற செலவுகளின் சுமை காணப்படும். பணத்தை திட்டமிட்டு முறையாக கையாள்வதன் மூலம் இதனை தவிர்க்கலாம்.

உங்கள் தாய்க்கு கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று பதற்றமும் வருத்தமும் காணப்படும். நீங்கள் உணர்ச்சிப் பூர்வமாகப் பேசுவீர்கள். இதனை தவிர்ப்பதன் மூலம் பாதகமான சூழ்நிலை ஏற்படாமல் இருக்கும். பிரார்த்தனை சிறந்த பலனைத் தரும்.

பணியிடத்தில் அதிகப் பணிகள் காணப்படும். அதனால் உங்கள் பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்களின் அகந்தைப் போக்கு காரணமாக உங்கள் துணையுடன் பிரச்சினை ஏற்படும். என்றாலும் மனம் திறந்த பேச்சின் மூலம் நன்மை விளையும்.

இன்று அதிக பொறுப்புகள் காரணமாக பணப்பற்றாக் குறை காணப்படும். எனவே செலவுகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.நரம்பு பாதிப்பு காரணமாக கணுக்கால் மற்றும் தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள்- 22.11.2025




இன்று சிறந்த மனநிலை காணப் படும். உங்கள் பணிகளை எளிதில் முடிப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். புதிய நண்பர் களின் அறிமுகம் கிடைக்கும்.

உங்கள் பணியில் வெற்றி பெறுவீர்கள். குறித்த நேரத்திற்கு முன்பே உங்கள் பணிகளை முடித்து விடுவீர்கள்.

உங்கள் அன்பான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இதனால் உங்கள் உறவில் மகிழ்ச்சி ஏற்படும்.

உங்கள் பணியில் நேர்மையாக இருப்பீர்கள். உங்கள் கடின உழைப்பிற்கு ஊக்கத்தொகை வகையில் பணம் பெறுவீர்கள்.




இன்று உங்களிடம் ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும். உங்கள் புத்திசாலித்தனத்தால் இன்று வெற்றி காண்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

உங்கள் நேர்மை மற்றும் கடின உழைப்பு காரணமாக பணியிடச் சூழல் சுமூகமாக இருக்கும் உங்கள் செயல் திறன் திருப்திகரமாக இருக்கும். உங்கள் பணிகளை திறமையாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் அனுசரித்துப் போவதன் மூலம் நன்மை விளையும். நீங்கள் இருவரும் பரஸ்பரம் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். இன்றைய நாளை லாபகரமான முதலீடு செய்ய பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நீங்கள் சிறந்த ஆற்ற லுடனும் உறுதியுடனும் காணப்ப டுவீர்கள். உங்கள் முடிவுகளில் கவனம் தேவை. நீங்கள் வீழ்ச்சியடையாமல் இருப்பதற்கு விவேகமாக நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் நல்லுறவு காணப்படாது. வேலை இழக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது.

உங்களிடம் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். நேர்மறையான அணுகுமுறை நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தும்.

உங்கள் அஜாக்கிரதை காரணமாக பண இழப்பு ஏற்படும். சேமிப்பதற்காக பணம் ஈட்டுவதை இன்று கடினமாக உணர்வீர்கள்.




இன்று நீங்கள் சில சௌகரியங் களை விட்டுக்கொடுக்க வேண்டியி ருக்கும். இன்று சஞ்சலமான மனநிலையில் இருப்பீர்கள். இன்று தகுந்த முடிவுகளை எடுக்க இயலாது.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதை கடினமாகக் கருதுவீர்கள். திட்டமிட்டு பணிகளை ஒழுங்கமைத்து செயலாற்றுவது சிறந்தது.

உங்கள் உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க நீங்கள் அமைதியான சகஜமான அணுகுமுறை மேற்கொள்ளவும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். குடும் பத்திற்காக அதிக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும். தாயின் உடல்நிலை குறித்த கவலை இருக்கும்.





# வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீட்டை திறந்து வைத்தார் சுனில் ரணசிங்க

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஒரு மில்லியன் ரூபா நிதிப் பங்களிப்பில் அமைக்கப்பட்ட வீட்டை, வீடமைப்பு நிர்மாண மற்றும் நீர்வளங்கள் அமைச்சர் சுனில் ரணசிங்க திறந்து வைத்தார்.

பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புலோலி தெற்கு ஜே/414 கிராமசேவகர் பிரிவில் பயனாளி ஒருவரின் வீடு நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ஜீவமலர் உள்ளிட்ட வீடமைப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் பருத்தித்தறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் தயானந்தன் உள்ளிட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அப்பகுதி கிராம அலுவலர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

